**Tamilmanam International Research Journal of Tamil Studies**
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

Vol. 20, No. 01 (Oct 2026), pp. 250–256
tamilmanam.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

# ம.காமுத்துரையின் கலவை நாவலில் வட்டார வழக்காறுகளும் பண்பாட்டுப் பதிவுகளும்

**மணிகண்டன் செ***

முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை உயராய்வு மையம், அருள்மிகு பழனியாண்டவர் கலை மற்றும் பண்பாட்டுக் கல்லூரி, பழனி. *624601., India*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: மணிகண்டன் செ — mmani043426@gmail.com

| Received / பெறப்பட்டது | Revised / திருத்தப்பட்டது | Accepted / ஏற்கப்பட்டது | Published / வெளியிடப்பட்டது |
|---|---|---|---|
| 1 October 2026 | — | 4 October 2026 | — |

| DOI | Article ID / கட்டுரை எண் |
|---|---|
| — | TAJP-2026-00052 |

## ஆய்வுச்சுருக்கம்

நாவல் இலக்கியத்தின் பரிணாம வளர்ச்சியில் வட்டார நாவல் என்ற பிரிவு மிக முக்கியமான இடத்தை வகிக்கின்றது. குறிப்பிட்ட ஒரு நிலப்பரப்பில் வாழும் மக்களின் வாழ்க்கையை அவர்களின் தனித்துவமான மொழிநடையுடன் அப்படியே பிரதிபலிப்பது வட்டார இலக்கியத்தின் தனிச்சிறப்பாகும். ம.காமுத்துரையின் கலவை நாவலானது மதுரை மாவட்டத்தில் இருந்து பிரிந்த தென் மாவட்டமான தேனி வட்டார மக்களின் வாழ்வியல் சூழலைப் பல்வேறு பரிமாணங்களில் பதிவு செய்யும் படைப்பாக அமைகிறது. குறிப்பாக வட்டார மக்களின் பேச்சுமொழி, சொலவடைகள், பழமொழிகள், நம்பிக்கைகள், சடங்குகள், தொழில் சார்ந்த நடைமுறைகள், பழக்கவழக்கங்கள் புழங்குபொருட்கள் போன்றவை நாவலின் கதைப்போக்குடன் இயல்பாக இணைந்துள்ளன. இவ்வாறான வட்டார வழக்காறுகளில் அந்த மக்களின் வாழ்வியல் மற்றும் பண்பாடுகள் வெளிப்படுகின்றன. கலவை நாவலில் இடம்பெறும் வட்டார வழக்காறுகளையும் அவற்றின் வழியாகப் பதிவாகும் பண்பாட்டுக் கூறுகளையும் இக்கட்டுரை ஆராய்கிறது.

**Keywords / திறவுச்சொற்கள்:** கலவை; ம.காமுத்துரை; வட்டார வழக்கு; சொலவடை; பழமொழி; நம்பிக்கை சடங்கு; பண்பாடு; வாழ்வியல்

## Abstract

The regional novel occupies an important place in the evolutionary development of Tamil novel literature. One of the distinctive features of regional literature is its ability to reflect the life of the people inhabiting a particular geographical region through their unique dialect and linguistic style. M. Kamuthurai's novel Kalavai portrays the socio-cultural and lived experiences of the people of the Theni region, which was separated from Madurai district, through various dimensions. In particular, the dialect of the regional people, idiomatic expressions, proverbs, beliefs, rituals, occupational practices, customs, traditions, and objects of everyday use are naturally integrated into the narrative of the novel. Such regional expressions reveal the lifestyle, cultural practices, social relationships, and beliefs of the people. Therefore, this paper examines the regional expressions found in M. Kamuthurai's Kalavai and analyses the cultural elements

represented through them.

**How to cite / மேற்கோள் காட்டும் முறை:** செ, ம. (2026). ம.காமுத்துரையின் கலவை நாவலில் வட்டார வழக்காறுகளும் பண்பாட்டுப் பதிவுகளும். Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01). https://tamilmanam.in/?post_type=tajp_article&p=8735

## முன்னுரை

தமிழ் நாவல் இலக்கியம் சமூகத்தின் பல்வேறு வாழ்க்கை நிலைகளைப் பதிவு செய்யும் முக்கியமான இலக்கிய வடிவமாகும். குறிப்பிட்ட நிலப்பரப்பில் வாழும் மக்களின் பேச்சு, தொழில், உறவுமுறை, பழக்கவழக்கம், நம்பிக்கை போன்றவற்றை இயல்பாகப் பதிவு செய்யும்போது அந்தப் படைப்பில் வட்டாரத் தன்மை உருவாகிறது.

ம.காமுத்துரையின் கலவை நாவலும் இத்தகைய வட்டார வாழ்வியலை வெளிப்படுத்தும் படைப்பாகக் கருதலாம். நாவலில் பயன்படுத்தப்படும் பேச்சுவழக்கு சொற்கள், சொலவடைகள் பழமொழிகள் ஆகியவை கதாபாத்திரங்களின் இயல்பான உரையாடல்களோடு இணைகின்றன. அதேபோல் மக்கள் கடைப்பிடிக்கும் நம்பிக்கைகள், சடங்குகள், புழங்கு பொருட்கள், தொழில் சார்ந்த பழக்கங்கள் ஆகியவை அவர்களின் பண்பாட்டு அடையாளங்களை வெளிப்படுத்துகின்றன.

## ஆய்வின் நோக்கம்

கலவை நாவலில் இடம்பெறும் வட்டார வழக்குகளைக் கண்டறிதல், அவற்றின் தன்மையை விளக்குதல், சொலவடைகள், பழமொழிகள், நம்பிக்கைகள் மற்றும் சடங்குகள் ஆகிய பண்பாட்டுக் கூறுகளையும் ஆராய்வதே இவவாய்வின் முக்கிய நோக்கங்கள் ஆகும்.

## வட்டார வழக்கு – பொருள்

ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியில் வாழும் மக்கள் தங்களுக்கே உரிய முறையில் பயன்படுத்தும் மொழிநடை, சொற்கள் உச்சரிப்பு, சொற்றொடர்கள், பழமொழிகள், சொலவடைகள் ஆகியவற்றின் தொகுப்பை வட்டார வழக்கு எனலாம். அது ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் வாழ்க்கை அனுபவத்தையும் பண்பாட்டு நினைவுகளையும் தன்னகத்தே கொண்டிருக்கும் மொழியியல் அடையாளமாகும்.

## கலவை நாவலில் வட்டார வழக்கு (பேச்சுமொழி)

கலவை நாவலில் கதாபாத்திரங்கள் தங்கள் அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்தும் பேச்சுமொழி இடம்பெறுகிறது. இதனால் கதாபாத்திரங்களின் உரையாடல்கள் இயல்புத் தன்மையைப் பெறுகின்றன. தேனி மாவட்ட மக்களின் வட்டார பேச்சுமொழி, சொல் உச்சரிப்பு, சொற்றொடர், பேச்சுநடை ஆகியவற்றில் தனித்தன்மை பெற்று விளங்குகின்றது.

**“வாங்குனதப் பூராம் <u>சிறுவாட்ல</u> ஒதுக்குனா காணமத்தேம் போகும்" என <u>கொணட்டிப்</u> பேசிவிட்டாள் முனியம்மா. அவ்வளவுதான் காமுத்தாயிக்கு அவளைக் கண்டாலே <u>ஒப்பாது.</u> <u>பச்சநாவியாத்தான்</u> எரிந்து விழுவாள்.”**[1]

இம்மேற்கோளில் தேனி வட்டார மக்களின் பேச்சுநடையில் வட்டார வழக்கானது வெளிப்படுவதை தனது கலவை நாவலில் ம.காமுத்துரை அவர்கள் குறிப்பிடுகிறார்.

மேலும், **வெறுவாக்யளங்கெட்டவ, கீசறிமேசறி, ரச்சகெட்டசிறுக்கி, பக்கி பதவக்காடு** போன்ற வட்டார வழக்குகளையும் கலவை நாவலில் பதிவிடுகிறார். **வகுசி, விருமுட்டி, ரப்பு, பகுமானக்காரி** போன்ற வட்டார வழக்குச் சொற்களை கடசல் நாவலிலும்

**மெப்பனை, ராவிட்டேன், இசிபட்டு, நொண்டம்** போன்ற வட்டார வழக்குச் சொற்களை மில் நாவலிலும் ம.காமுத்துரை அவர்கள் குறிப்பிட்டுள்ளதை அறியமுடிகிறது.

**வட்டார நம்பிக்கைகள்**

வட்டார மக்களின் வாழ்க்கையில் நம்பிக்கைகள் முக்கியமான பண்பாட்டுக் கூறாக விளங்குகின்றன. இயற்கை, தெய்வம், குடும்பம், மருத்துவம், நோய், பிறப்பு, இறப்பு, கனவு போன்றவற்றைச் சுற்றி பல்வேறு நம்பிக்கைகள் உருவாகியுள்ளன. கலவை நாவலில் இடம்பெறும் நம்பிக்கைகள் அந்த மக்களின் வாழ்க்கையைப் புரிந்துகொள்ளும் முறையை வெளிப்படுத்துகின்றன.

**“நம்பிக்கை என்பது காலம் காலமாக ஒரு தலைமுறை இடமிருந்து இன்னொரு தலைமுறைக்கு பரவி வருதாகும்.”**[2] என்ற மேற்கோளில் சு.சக்திவேல் அவர்கள் தனது நாட்டுப்புற இயல் ஆய்வு நூலில் குறிப்பிடுகின்றார்.

**“நாட்டுப்புற நம்பிக்கைகளுக்கு மூன்று வகை காரணங்களை உரைக்கலாம். ஒன்று செய்வினை எனப்படும் மந்திரம் (MAGIC), இரண்டு மருத்துவம் (FOLK MEDICINE), மூன்று விலக்குகள் (TABOOS)”**[3] என்னும் மேற்கோளில் சு.சண்முகசுந்தரம் தனது நாட்டுப்புற இயல் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

**அருள்மிகு மொண்டிக்கருப்பு துணை, இவ்விடத்தே நல்ல முறையில் தொக்கம் எடுக்கப்படும். மருந்து மாயம் ஏவல் செய்வினை அனைத்தும் பார்த்து நிவர்த்தி செய்யப்படும். தொக்கம் எடுக்க வரும்போது சளி, இருமல் சரிபண்ணிவிட்டு வரவும், முக்கியமாக வெறும் வயிற்றில் வருவது சிறந்தது.**

இப்பத்தியில் நோய் மற்றும் மருத்துவம் தொடர்பான நம்பிக்கையை தெளிவாக தனது கலவை நாவலில் ம.காமுத்துரை அவர்கள் எடுத்துரைக்கிறார். இக்கருத்தைப் போன்றே

**“பூச்சி (பாம்பு)க்கடி, பூரான்கடிக்கு அங்கே உட்கார்ந்துதான் மருந்து அரைத்துக் கொடுப்பார். முக்கியமாக பேய்பிடித்த பொம்பளைகளுக்கு உடுக்கை அடித்துப் பேய் ஓட்டுவது அந்த மண்டபத்தில்தான்.”**[4]

என்ற மேற்கோளில் நோய் மற்றும் மருத்துவ நம்பிக்கையை தன் பிற நாவலான கடசலில் ம.காமுத்துரை அவர்கள் குறிப்பிட்டுள்ளது ஒப்புநோக்கத்தக்காதாகும்.

**அரசமரமும் மரத்தின் கீழ் திரிசூலம் ஒன்று ஊன்றப்பட்டு சந்தன குங்குமம் தீற்றப்பட்ட ஒரு அம்மன் கோயிலும் இருந்தது** என்ற இயற்கை நம்பிக்கையை கடசல் நாவலிலும்,

**“ஈரல தனியாசுட்டு வச்சிரணும். படையல்ல முனியப்பனுக்கு முக்கியம்..”**[5] என்ற மேற்கோளில் தெய்வ நம்பிக்கையையும் ம.காமுத்துரை அவர்கள் குதிப்பி நாவலிலும் எடுத்துரைக்கிறார்.

**வட்டார சடங்குகள்**

ஒரு சமூகத்தினர் அல்லது குறிப்பிட்ட வட்டார மக்கள் தங்களுடைய மரபு, நம்பிக்கை, சமயம், வாழ்க்கைமுறை, ஆகியவற்றின் அடிப்படையில் தலைமுறை தலைமுறையாக கடைபிடித்து வரும் செயல்முறையே சடங்கு எனப்படுகிறது. இச்சடங்கினை **செந்தமிழ் அகராதி ‘கிரியை’** என்று குறிப்பிடுகிறது. பிறப்பு, திருமணம், தெய்வ வழிபாடு, நேர்த்திக்கடன், இறப்பு போன்ற பலதரபட்ட சடங்கு முறைகளும் பின்பற்றப்படுகின்றது.

**பூமி பூஜையில் வந்து நின்றவர் வானம் தோண்டும்போது, பில்லர் நடுகிறபோது, சுவர் எழுப்புகிற நேரம் என்று ஒவ்வொன்றுக்கும் நாள், கிழமை, நேரம் குறிப்பதோடு எந்தத் திசையில் நின்று வேலையைத் தொடவேண்டும் என்றும் உத்தரவு சொல்லுவார்**

இப்பத்தியில் நல்ல நேரம் பார்த்து பூமி பூஜை தொடங்குதல், பில்லர் நடுதல் போன்ற தெய்வ வழிபாட்டுச் சடங்குமுறைகளை கட்டிடத்தொழிலாளர்கள் பின்பற்றியுள்ளதை ம.காமுத்துரை அவர்கள் கலவை நாவலில் எடுத்துக்காட்டியுள்ளார்.

**நீர்மாலை எடுக்கறப்ப பல்லு தீத்தி, பூணூல் போட்டு.. கொள்ளிவச்சு கொடம் ஒடச்சு, குளியல் போட்டாச்சுனா கடம முடியும்…**

இத்தொடரில் இறந்த தந்தைக்கு மகன் செய்யும் இறப்புச் சடங்கைப் பற்றி தனது பிற நாவலான குதிப்பி நாவலில் ம.காமுத்துரை குறிப்பிட்டுள்ளதை பார்க்கமுடிகிறது.

### வட்டாரத் தெய்வ வழிபாடு

ஒரு குறிப்பிட்ட வட்டார மக்களின் பண்பாட்டை வெளிப்படுத்தும் முக்கியக் கூறுகளில் தெய்வ வழிபாடும் ஒன்றாகும். மக்கள் தங்களுடைய வாழ்க்கையில் ஏற்படும் இன்பம், துன்பம், நோய், இயற்கை மாற்றம், குடும்ப நலம், தொழில் வளம் போன்றவற்றுடன் தெய்வ நம்பிக்கையை இணைத்துப் பார்க்கின்றனர். எனவே, தெய்வ வழிபாடு என்பது வெறும் சமயச் செயல்பாடாக இல்லாமல், மக்களின் வாழ்வியல் மற்றும் பண்பாட்டு அடையாளத்தின் ஒரு பகுதியாக விளங்குகிறது.

**சந்தை மாரியம்மன் மூலஸ்தானம் ஊருக்குள்தான் இருக்கிறது. பெரிய கோயிலுக்கு ஊர்வலமாக இங்கிருந்துதான் கிளம்புவார்.**

**ஆமாயா, பொட்டி தூக்கி கொட்டு மொழக்கோட ஆத்தாள அழச்சிட்டுப் போவணும்ல**

இவ்வரிகளின் மூலமாக வட்டார மக்களின் தெய்வங்கள், அந்த தெய்வங்களுக்கு நடத்தப்படும் திருவிழாக்கள் போன்ற தெய்வ வழிபாட்டு முறைகள் பற்றி ம.காமுத்துரை அவர்கள் தனது கலவை நாவலில் சித்தரிக்கின்றார்.

### வட்டாரத் தொழில்கள்

கலவை நாவலின் முக்கியமான பண்பாட்டுப் பதிவுகளில் தொழில் சார்ந்த வாழ்க்கையும் ஒன்றாகும். குறிப்பிட்ட தொழிலைச் சார்ந்த மக்களின் அன்றாட உழைப்பு, தொழில் நடைமுறைகள், தொழிலாளர் உறவுகள், பயன்படுத்தப்படும் கருவிகள் தொழில் சார்ந்த சொற்கள் ஆகியவை அவர்களின் வாழ்வியலை வெளிப்படுத்துகின்றன

**கலவைக்கு சல்லி சுமக்கும் ஆளை, காலிச்சட்டிகளைப் போய்ச் சேகரிக்கச் சொல்வான். சட்டியை அடுக்கிக் கொண்டிருக்கும் பெண்ணை**

**மிசினுக்கு தண்ணி சுமந்து ஊற்றச் சொல்வான். எல்லாம் கிடைக்கட்டுமென வயசுப் பிள்ளைகளைப் பூராவும் சாரத்தில் ஏறி நிற்கச்சொல்வான்.**

இத்தொடரில் கட்டுமான தொழிலாளர்களின் தொழில் பண்பாட்டை தனது கலவை நாவலில் ம.காமுத்துரை எடுத்துக்காட்டுகிறார்.

### வட்டாரச் சொல்லாடல்

மக்கள் பேசும் விதத்தில் வெளிப்படும் தனித்துவமான மொழி நடை சொல்லாடல் எனப்படுகிறது. வெறுமனே வார்த்தைகளை பயன்படுத்துவது மட்டுமல்லாமல் ஒரு குறிப்பிட்ட சூழலில் கருத்துக்களை பரிமாற்றிக் கொள்ளும் முறையே சொல்லாடல் எனப்படுகிறது.

**கெடக்கது கெடக்கட்டும் கெழவியத் தூக்கி மனையில வய்யிடின்னு பேசுனர் என்னா சொல்றது?** என்ற வரிகளில் முக்கியமான ஒரு செயலைப் புறக்கணித்துவிட்டு, அதைவிட அவசியமில்லாத வேறு ஒரு செயலில் கவனம் செலுத்தும் ஒருவரை குத்திக்காட்டும் நோக்கோடு குறிப்பிடக்கூடிய சொல்லாடலை தனது கலவை நாவலில் ம.காமுத்துரை தெளிவுபடுத்துகிறார்.

### வட்டாரச் சொலவடைகள்

குறிப்பிட்ட கருத்தை சுருக்கமாகவும் அனுபவத்தின் அடிப்படையில் வெளிப்படுத்தும் மரபுத்தொடர் சொலவடை எனப்படுகிறது. இச்சொலவடையானது வட்டார மக்களின் வாழ்வியல் அனுபவங்களையும் சமூகச் சிந்தனைகளையும் சுருக்கமாக வெளிப்படுத்தும் பண்பாட்டுக் கூறுகளாகும்.

**வெளக்க மாத்துக்கு பட்டுக்குஞ்சம் கட்டுனமாதிரி** என்ற வரிகளில் பொருத்தமில்லாத இடத்தில் ஆடம்பரம் செய்யும் செயலை நகைச்சுவை உணர்வோடு தனது கலவை நாவலில் சொலவடையாக ம.காமுத்துரை அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்.

### வட்டாரப் பழமொழி

முதுமொழி, பழஞ்சொல், முதுசொல், வசனம் என்னும் பல பெயர்களைக் கொண்ட பழமொழியானது குறைந்த சொற்களில் நிறைந்த கருத்தைக் கூறும் தனித்துவத்தைக் கொண்டதாகும்.

**ஆக்குறவளுக்கு ஆறு மாசப் பாடு. அழிக்கிறவளுக்கு? அர நுமுசந்தே!**

ஒரு பொருளை உருவாக்குவதற்கோ வளர்ப்பதற்கோ நீண்ட கால உழைப்பு தேவைப்படுகிறது. ஆனால் அதை அழிப்பதற்கு மிகக் குறுகிய நேரமே போதும் என்ற ஆழ்ந்த கருத்தை குறுகிய வரிகளில் கூறக்கூடிய பழமொழியை தனது கலவை நாவலில் ம.காமுத்துரை கையாண்டுள்ளார்.

**“மாட்டுக்கு நோவாம் காக்காயிக்கு கொண்டாட்டமாம்” மடமடவெனப் பொரிந்தான்ராசு”**[6]

இந்த மேற்கோளில் ஒருவருக்கு ஏற்படும் துன்பம் மற்றொருவருக்குப் பயனாகவோ மகிழ்ச்சியாகவோ அமையக்கூடிய கருத்தினை பழமொழி வடிவில் தனது பிற நாவலான மில் நாவலில் ம.காமுத்துரை அவர்கள் பதிவிடுகிறார்.

### புழங்கு பொருட்கள்

ஒரு வட்டார மக்களின் அன்றாட வாழ்வில் பயன்பட்டு வரும் பொருட்கள், அவர்களின் வாழ்வியல் முறையையும் பண்பாட்டு அடையாளத்தையும்

வெளிப்படுத்தும்போது அவை புழங்கு பொருட்களாகக் கருதப்படுகின்றன.

**நாலு சல்லடை, பதிமூணு, தண்ணி ட்ரம், எண்பத்து மூணு, சாந்துச் சட்டிகள், எட்டு மம்பட்டி, திம்ஸ் மூணு, பிக்காச்சி ரெண்டு சம்மட்டி மூணு கடப்பாரை ஆறு, கோக்காலி சிறுசு அஞ்சி, பெருசு மூணு**

இவ்வரிகளில் கட்டிடத்தொழிலாளர்கள் அன்றாடம் தன் தொழிலுக்கு பயன்படுத்தும் புழங்குபொருட்களை தனது கலவை நாவலில் ம.காமுத்துரை அவர்கள் தெளிவாகப் பட்டியலிடுகின்றார்.

இக்கருத்தைப் போன்று

**பம்ப், அரம், காம்பஸ், பிட்டு, பெல்டு, பேரிங், புல்லர், டர்னர்**

என பட்டறைத் தொழிலாளர்களின் புழங்குபொருட்களை தனது பிற நாவலான கடசல் நாவலில் ம.காமுத்துரை அவர்கள் குறிப்பிடுகின்றார்.

### பட்டப்பெயர்கள்

வட்டார வழக்கில் பட்டப்பெயர் என்பது ஒருவரின் இயற்பெயருக்கு அப்பால், அவருடைய தோற்றம், குணம், தொழில், உடல் அமைப்பு, பழக்கம், செயல்பாடு, குடும்பப்பின்னணி போன்றவற்றின் அடிப்படையில் ஊர் மக்களால் வழங்கப்படும் பெயராகும். கலவை நாவலில் இடம்பெறும் பட்டப்பெயர்கள் வெறும் அழைப்புச் சொற்களாக இல்லாமல், அப்பகுதி மக்களின் வாழ்வியல் மற்றும் பண்பாட்டு உறவுகளின் பதிவுகளாகவும் அமைகின்றன.

கலவை நாவலில் **சாம்பார், கொசுவு, கொரங்குவெரட்டி குமாரு, கொடமுருட்டி கணேசன்** போன்ற பட்டப்பெயர்கள் இடம்பெறுகின்றன. நாவலில் குமார் என்பவன் தன்னுடன் பணிபுரியும் மற்ற பணியாட்களை வேலை வாங்குவதற்காக குரங்கு விரட்டுவதைப் போன்று விரட்டும் செயல்பாட்டினை வைத்து அவனை கொரங்குவெரட்டி குமாரு என்று பட்டப்பெயர் வைத்து அழைக்கும் விதத்தினை தனது கலவை நாவலில் ம.காமுத்துரை தெளிவாக பதிவிடுகிறார்.

### முடிவுரை

ம.காமுத்துரையின் கலவை நாவல் கதை சொல்லும் படைப்பாக மட்டுமின்றி குறிப்பிட்ட வட்டார மக்களின் மொழி மற்றும் பண்பாட்டு வாழ்வியலைப் பதிவு செய்யும் இலக்கிய ஆவணமாகவும் பார்க்கத்தக்கது. நாவலில் இடம்பெறும் வட்டாரச் சொற்கள், பேச்சுமொழி சொலவடைகள், பழமொழிகள், நம்பிக்கைகள், சடங்குகள், தொழில் சார்ந்த நடைமுறைகள் மற்றும் புழங்குபொருட்கள் ஆகியவை மக்களின் வாழ்வியலை முழுமைப்படுத்துகின்றன. எனவே, கலவை நாவலில் பதிவாகும் வட்டார வழக்காறுகள் தென்னாட்டு மக்களின் பண்பாட்டுப் பதிவுகளை வெளிப்படுத்தும் சான்றாக அமைகின்றது.

### அடிக்குறிப்புகள்

1. கலவை - ம.காமுத்துரை – பக்கம் : 131
2. நாட்டுப்புற இயல் ஆய்வு – சு.சக்திவேல் - பக்கம்: 189
3. நாட்டுப்புற இயல் – சு.சண்முகசுந்தரம் – பக்கம்: 149
4. கடசல் – ம.காமுத்துரை – பக்கம் : 79
5. குதிப்பி – ம.காமுத்துரை – பக்கம் : 87

6. மில் - ம.காமுத்துரை – பக்கம் : 21

## துணை நூற்பட்டியல்

1. காமுத்துரை. ம, குதிப்பி, டிஸ்கவரி புக் பேலஸ்,
சென்னை - 600 078. முதல் பதிப்பு : நவம்பர் 2019.

2. காமுத்துரை. ம, மில், டிஸ்கவரி பப்ளிகேஷன்ஸ், ரோஹிணி பிரிண்டர்ஸ்,
சென்னை - 600 078. முதல் பதிப்பு : மே 2010.

3. காமுத்துரை. ம, கலவை, விகடன் பிரசுரம்,
சென்னை - 600 002. முதல் பதிப்பு : டிசம்பர் 2023.

4. காமுத்துரை. ம. கடசல், எழுத்து பிரசுரம்,
சென்னை - 600 040. முதல் பதிப்பு : டிசம்பர் 2021.

5. சக்திவேல். சு, நாட்டுப்புற இயல் ஆய்வு, மணிவாசகர் பதிப்பகம்,
சென்னை - 600 108. நான்காம் பதிப்பு : டிசம்பர் 2016.

6. சண்முகசுந்தரம். சு, நாட்டுப்புற இயல், காவ்யா வெளியீடு,
சென்னை - 600 024. ஐந்தாம் பதிப்பு : டிசம்பர் 2013.

© 2026 மணிகண்டன் செ. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..